மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

OS.No.10/2024

2025—ம் ஆண்டு மார்ச் திங்கள் 06—ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4—ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேகர் (Pw1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

நாள்.06.03.2025

வா.சா.1

குறுக்கு விசாரணை :

நான் தாக்கல் செய்த வழக்கு விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கின் பிரதிவாதி எனது உடன்பிறந்தவர் ஆவார். எனது தகப்பனார் வீரனுக்கு எத்தனை பேர் வாரிசுகள் என்றால் 1.சண்முகம், 2.பஞ்சவர்ணம், 3.ஆறுமுகம். 4.சேகர், 5.சுப்பிரமணி ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். நான் இராமேஸ்வரத்திற்கு 1990 ல் தொழிலுக்காக வந்தேன். அப்போது எனக்கு என்ன வயது என்றால் 17 வயது இருக்கும். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 819/2 தற்போது 820/2B ஆகும். அதன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 2 செண்ட் ஆகும். இந்த 2 செண்டுக்கு தான் வழககு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1/2 செண்டுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது 1/2 செண்ட் பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி இருக்கும் சொத்தை கேட்டு வழககு போட்டுள்ளேன். தாவா சொத்தின் நான்குமால் என்ன என்றால் கிழக்கு பக்கம் பொதுப்பாதை, மேற்கு பக்கம் எனது இடம் அதற்கு பின்பு மனோகரன் இடம், தெற்கு பக்கம் காளிமுத்து, சித்ரா இடம், வடக்கு ஆண்டி, அழகம்மாள் இடம் உள்ளது. நான் குடியிருந்து வரும் வீடு தென்வடல் பாதைக்கு கிழக்கு பக்கம் குடியிருந்து வருகிறேன் என்றால் மேற்கு பக்கம் குடியிருந்து வருகிறேன். ஆதியில் யாருக்கு அரசால் கொடுக்கப்பட்டது என்றால் சோனை மகன் மணி என்பவருக்கு 1984 ல் கொடுக்கப்பட்டது. அவரிடமிருந்து நான் எந்த வருடம் கிரையம் வாங்கினேன் என்றால் 29.10.2010 தேதியில் எனது மனைவிக்கு பவர் கொடுத்தார் எனது மனைவி எனக்கு கிரையம் கொடுத்தார். பவர் பத்திரம் பதிவு செய்யப்பட்டதா என்றால் செய்யப்பட்டது. பதிவு செய்த பவர் பத்திரத்தையோ, நான் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். இதற்கு முன்பு இதே தாவா சொத்து சம்பந்தமாக இதே நீதிமன்றத்தில் OS.No.5/2013 வழக்கு தாக்கல்

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.03.06 14:13:00 +0530

செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் பிரதிவாதிகள் யார் என்றால் பஞ்சவர்ணம், சுப்பிரமணி ஆகியோர்கள் ஆவார்கள். அவர்களுக்கு எதிராக இதே பரிகாரம் கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். OS.No.5/2013 வழக்கு கடந்த 15.11.2017 தேதியன்று எனக்கு எதிராக தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். இந்த தள்ளுபடி உத்தரவுக்கு எதிராக நான் மேல்முறையீடு செய்தேனா என்றால் செய்யவில்லை. OS.No.5/2013 வழக்கில் தமிழக அரசை பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிலும் அரசு தரப்பில் யாரையும் பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. OS.No.5/2013 வழக்கு தள்ளுபடியானதன் பின்பு நான் மேல்முறையீடு செய்யாமல் மாவட்ட ஆட்சியரிடம் வாங்கிய உத்தரவு செல்லாது என்றால் சரியல்ல. OS.No.5/2013 வழக்கில் பஞ்சவர்ணம், சுப்பிரமணியம் ஆகியோரை பிரதிவாதியாக சேர்த்து விட்டு இந்த வழக்கில் சுப்பிரமணியை பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான் சுப்பிரமணி காலி செய்து போய்விட்டார். இந்த விபரத்தை எனது வழக்கிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். OS.No.5/2013 வழக்கில் தாவா சொத்தின் மதிப்பு விபரம் ரூ.84,000/- என்று மதிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஆனால் இந்த வழக்கில் தாவா சொத்தின் மதிப்பு விபரம் ரூ.40,000/- என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். OS.No.5/2013 வழக்கில் சொல்லப்பட்டுள்ள மதிப்பிட்டு விபரமும், இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள மதிப்பிட்டு விபரத்தை மாற்றி நீதிமன்றத்தை ஏமாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. OS.No.5/2013 வழக்கில் சொல்லப்பட்டுள்ள வழக்குரையில் உள்ள விபரமும், இந்த வழக்கு விபரமும் வேறு, வேறாக உள்ளதுஎன்றால் சரியல்ல. தள்ளுபடியானதால் எனக்கு சாதகமான விபரம் சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் எந்த காலத்திலும் குடியிருக்கவில்லை என்றாலும், குடியிருந்ததாக சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்துள்னே் என்றால் சரியல்ல. 2019 ல் மழை பெய்து பிரதிவாதி பஞ்சவர்ணம் வீடு இடிந்து நிவாரணப் பொருட்களை அவர் தான் வாங்கினார், நான் வாங்கினேன் என்றால் சரியல்ல நான் மனு கொடுத்தேன். ஆனால் 2018 ல் எனது பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டு விட்டது என்று இந்த வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பஞ்சவர்ணம் மனைவி பஞ்சு பெயரிலும் இதே சர்வே எண்.819/2 ல் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. நான் 2010 ல் கிரையம் வாங்கிய பத்திரம் எதுவும் மணி அவர்கள் எனக்கு கிரையம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கிரையம் எனது அண்ணன் பஞ்சவர்ணத்திற்கு தான் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது மனைவி பெயரும் பஞ்சவர்ணம் என்பதால் அரசை ஏமாற்றி எனது பெயருக்கு பட்டா வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் ஏற்கனவே ஒரு வழக்கு தாக்கல் செய்து தள்ளுபடியான பின்பு மேல்முறையீடுசெய்யாமல் இதே காரணங்களை கூறி இந்த நீதிமன்றத்தில் பொய்யாக ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு வீட்டு வரி ரசீதுகள் பிரதிவாதி

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.03.06 14:13:10 +0530

பஞ்சவர்ணம் தான் செலுத்திவருகிறார் என்றால சரியல்ல எனது பெயரில் தான் உள்ளது. எனது பெயரில் பட்டா, வரி ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எந்த காலத்திலும் நான் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.03.06 14:13:15 +0530